<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

OS.No.799/2021 பெயர்-சந்திரசேகரன் நாள்.04.01.2024

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

பிரதிவாதி என்னிடம் வாங்கியிருந்த கடன் தொகைக்காக காசோலை கொடுத்திருந்தார், அதனடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு பணம் கொடுக்காமல் ஏமாற்றும் நோக்கத்துடன் கிரய ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளதால் அது செல்லதக்கதல்ல என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். காசோலைகுண்டான பணத்தை செலுத்தக்கோரி அ.வ.எண்.871/2018 ல் இந்த பிரதிவாதியின் மீது வழக்கு தாக்கல் செய்து அது இரண்டாவது சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி காசோலையின் அடிப்படையிலான வழக்கில் தீர்ப்பு வராதபட்சத்தில் இந்த வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி தங்கவேலுவை சுமார் 15 வருடங்களாக எனக்கு தெரியும். பிரதிவாதியும் நானும், நண்பர்கள் என்றால் சரியல்ல, பழக்கம். நாங்கள் இருவரும் ஒரே இடத்தில் வேலை செய்தோமா என்றால் இல்லை. 1980 ம் வருடத்திலிருந்து பிரதிவாதியை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு கொடுத்ததாக கூறப்படும் தொகையை நான் ரொக்கமாக அவர் கையில் கொடுத்தேன். மேற்படி சமயத்தில் என் கையில் ரூ.4,00,000/- ரொக்கம் இருப்பதை காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். காசோலை வசூலாகாமல் திருப்பப்பட்டதற்கு பின்னிட்டு அதனடிப்படையில் குற்றவியல் நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை 14.11.2018 ம் தேதி அதாவது காசோலை மீதான வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே விற்பனை செய்துவிட்டார் என்றால் மோசடியாக கிரயம் செய்துள்ளார். அ.வ.எண்.871/2018 வழக்கை மேற்படி கிரயத்திற்கு பின்னிட்டு 06.12.2018 ம் தேதிதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதற்கு முன்பாகவே வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டேன். பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் செய்த சமயத்தில் மேற்படி சொத்தில் எந்தவித வில்லங்க விவகாரங்களோ, நீதிமன்ற பற்றுகையோ தடைய உத்தரவே இல்லாத நிலையில் மேற்படி கிரயம் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

நானும், பிரதிவாதியும் கூட்டாக தொழில் செய்த சமயத்தில் நம்பிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட காசோலை தவறாக பயன்படுத்தி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நாங்கள் இருவரும் கூட்டாக தொழில் எதுவும் செய்யவேயில்லை. நாங்கள் இருவரும் கூட்டாக தொழில் செய்த வந்த சமயத்தில் கோவை காந்திபுரம் ஆக்ஸிஸ் வங்கியில் பிரதிவாதியின் பெயரில் ஒரு கணக்கு தொடங்கி அதை நான் செயல்படுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. மேற்படி சமயத்தில் பிரதிவாதி வெளி மாநிலங்களுக்கு செய்யவேண்டி இருந்ததால் பூர்த்தி செய்யப்படாத காசோலையில் கையெழுத்து மட்டும் போட்டு பிரதிவாதி என்னிடம் கொடுத்துவிட்டு சென்றார் என்றால் சரியல்ல. அந்த காசோலையை வேறு நபர்களை வைத்து நிரப்பி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த காலத்திலும் என்னிடம் ரூ.4,00,000/- கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும், அதற்காக காசோலை கொடுக்கப்படவேயில்லை என்றாலும் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே கடன் கொடுத்தவர், கடன் பெற்றவர் என்ற உறவு முறை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கசோலையின் அடிப்படையில் பிரதிவாதி எந்தவித தொகையும் செலுத்த கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்தும் நபர் அல்ல. நான் புரோக்கர் தொழில் செய்து வந்தேன். நான் வட்டிக்கு கடன் கொடுக்கும் லேவாதேவி தொழில் செய்யும் நபர் என்றால் சரியல்ல. நான் நிறைய வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ளது நான் அல்ல. பிரதிவாதி வீடு கட்டுவதற்காக வங்கியில் லோன் போட்டு வீடு கட்டினார் என்றாலும், தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தின் காரணமாக அவரால் கடன் செலுத்த இயலவில்லை என்றாலும், அதன் காரணமாகதான் அவர் தாவா சொத்தை விற்பனை செய்தார் என்றாலும், மேற்படி கிரயம் சரியான பிரதிபிரையோஜனத்திற்கு ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. பிரதிவாதியை அழைக்கழிக்கவேண்டி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படதக்கது என்றால் சரியல்ல.

**வா.சா.1 : 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

(2 ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)